செ.வெ.எண்: 46 நாள்:24.08.2021

**நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளுர் வட்டம், வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய மாதா ஆண்டு பெருவிழா நிழ்ச்சிகளை கொரோனா தொற்று பரவாமல் தடுத்திட பக்தர்கள் நேரில் வரும் பயணத்தை தவிர்த்து, தொலைக்காட்சி, செய்திதாள்கள் மற்றும் சமூக வலைதளங்கள் மூலமாக கண்டுகளித்திட மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப.,அவர்கள் வேண்டுகோள்.**

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளுர் வட்டம், வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய மாதா **பேராலய** ஆண்டு பெருவிழா எதிர்வரும் 29.08.2021 முதல் 09.09.2021 வரை நடைபெறவுள்ளது. தற்போது, தமிழகத்தில் கொரானா தொற்று நோய் பரவல் காரணமாக அனைத்து மத வழிபாட்டுத்தளங்களிலும் 31.08.2021 வரை பொதுமக்களுக்கு பரிசினை மற்றும் மதம் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கு குற்றவியல் நடைமுறை சட்டம், 1973 பிரிவு 144 மற்றும் பேரிடர் மேலாண்மை சட்டம் 2005 ஆகியவற்றின் கீழ் தடைவிதிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய மாதா பேராலயத்திற்கு வழிபாடு செய்வதற்கு நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து பக்தர்கள் நடைபாதையாகவும், பேருந்துகள் மற்றும் வாகனங்கள் மூலமாக வருவதற்கு வாய்ப்புகள் உள்ளதால் வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய மாதா ஆண்டு பெருவிழா ஆலய ஆராதனை நிகழ்ச்சிகளை, பக்தர்கள் தொலைக்காட்சி, செய்திதாள்கள் மற்றும் சமூக வலைதளங்கள் மூலமாக கண்டுகளித்திடவும் பயணத்தை தவிர்த்து கொரோனா தொற்று பரவாமல் தடுத்திடவும் பொதுமக்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**